திட்டம் அந்த ஊராட்சி மன்றப் பகுதியில் வாழ்கிற மக்களுடைய குடிநீர்த் திட்டம். அதனுடைய ஆய்வு நடைபெற்று அது பயனுள்ளதாக இருக்கிறது என்று தீர்மானித்தால், கடன் பெறுகிற முறையைப் பயன்படுத்தி, அதற்காகக் கடன் நிதி பெற்று அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும். அந்தக் கடனைத் திருப்பித் தருகிற ஆற்றல் அந்தப் பேரூராட்சி மன்றத்திற்கு இருக்கவேண்டும். அந்த ஆற்றல் என்பது மக்கள் செலுத்துகிற வரியைப் பொறுத்தோ, குழாய்களுக்குத் தருகிற கட்டணத்தைப் பொறுத்தோ ஏற்படுகிறது. இதற்கு மாவட்ட ஆட்சியாளர் தெரிவிக்கிற ஆலோசனையைப் பெற்றுதான் முடிவுகாணப்படும்.

பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள்

***5 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 செப்டம்பர் முடிய தொழுநோய்க்காரர் புனர் வாழ்வு விடுதிகளில் எத்தனை பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்?

(இ) அதற்கான செலவு விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) 2,360 பேர்கள்.

(இ) ரூ. 13,86,742.58.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இப்பொழுது பல நகரங்களிலும் பிச்சைக்காரர்கள் தொல்லைகள் அதிகமாக இருக்கின்றன. அவற்றைத் தடுத்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு அரசு என்ன வழிவகை செய்யப் போகிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, பொதுவாக பிச்சை எடுப்பதைத் தடை செய்து ஏற்கெனவே சட்டம் இருக்கிறது. இப்பொழுது குறிப்பிட்டது தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இல்லங்களில் எத்தனை பேர் சேர்த்துக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள், அதற்கான செலவினங்கள் என்ன என்பதைப் பற்றியதாகும். இப்படிப்பட்ட பிச்சைக்காரர்களைச் சட்டப்படி

1974 சனவரி 19]

போலிசார் பிடித்து நீதி மன்றங்களில் வைத்து குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு, அதன்பிறகு அவர்கள் இத்தகைய இல்லங்களுக்குக் கொண்டுவந்து சேர்க்கப்படவேண்டும் என்று சட்டத்தை மாற்றவேண்டுமென்றுதான் முதலமைச்சர் அவர்கள் கூறிக் கொண்டு வருகிறார்கள். பொதுவாக, பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்குச் சட்டம் இப்பொழுது இருக்கிறது.

***6 வினா—திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைத் தெருக்களிலும் மற்ற ஊர்களிலும் கூட்டம் கூட்டமாகப் போய் பிச்சைக் கேட்கும் குஷ்ட நோய் வியாதியஸ்தர்களை எடுத்துச் சென்று பிச்சைக்காரர் விடுதிகளில் விட அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தொழுநோயால் துன்புறும் பிச்சைக்காரர்கள் தாம் தொழுநோய் பிச்சைக்காரர்கள் என்பதற்குத் தகுந்த அத்தாட்சியுடன் வந்தால் தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களில் சேர்த்துக்கொள்ளப் படுவர். தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இல்லங்களில் சேருவதற்கு மறுப்புத் தெரிவிப்பதாகத் தெரிய வந்தால் அவர்களைக் காவலர் மூலம் வளைத்துப் பிடித்து நீதிமன்றங்களில் குற்றவாளிகளெனத் தண்டிக்கப்பட்டு இவ்வில்லங்களில் அனுமதிக்கப்படுவார்கள். இதற்காக இவ்வில்லங்கள் 'சிறப்புக் காப்பு இல்லங்கள்' என அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே மொத்தமாக பிச்சை எடுப்பவர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று தோராயமாகக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா ? இந்தத் தொழுநோய் சென்டர் ஒன்றிற்கு வருடத்திற்கு எவ்வளவு பணம் செலவாகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஏறத்தாழ 25,000 பொதுவான பிச்சைக்காரர்கள் இருப்பதாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது. அதிலே 8,000-க்கு மேற்பட்டவர்கள் தொழுநோய் பிடித்தவர்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தக் கணக்கு கூட சில நேரங்களில் கூடுதல் குறைவாக இருக்கும். சிலர் கணக்கில் வராமல் இருக்கலாம். இந்தக் கணக்கு தோராயமாகத்

தான் எடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு இல்லத்திற்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4.50 லட்சம் செலவாகும், ரூ. 52,000 கருவிகள் முதலியன வாங்குவதற்கு ஒவ்வொரு இல்லத்திற்கும் செலவு செய்யப்பட்டு வருகிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன்: தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் ஒரு தொழுநோய் பிச்சைக்காரர்கள் விடுதி ஆரம்பிக்கப்பட்டிருந்தும், இன்னும் பல இடங்களில், குறிப்பாகக் கோவிலுக்குப் போகிற பாதைகளில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இன்னும் நிறைய பேர் பிச்சை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களைக் கொண்டு போய் இல்லங்களில் வைத்தாலும், அவர்களில் சிலர் ஓடி வந்து விடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படி ஓடி வந்தவர்களைக் கேட்டால் அங்கே கடுமையாக வேலை கொடுக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள். இது உண்மைதானா, கடுமையான வேலை தருவதுதான் அவர்கள் ஓடிவருவதற்குக் காரணமா என்பதை அரசு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஓடி வருவது உண்மையாகக் கூட இருக்கலாம். நிறைய பிச்சைக்காரர்கள் கூட திரும்பி வருவது உண்மையாக இருக்கலாம். ஆனால் அந்த சென்டர்களில் கடுமையான வேலை தரப்படுகிறது என்பதால் அவர்கள் ஓடி வருகிறார்கள் என்று சொல்லி விடமுடியாது. அவர்களுக்கு அங்கே சுலபமான வேலைதான் தரப்படுகிறது. அதுவும் கை, கால் அங்கஹீனமானவர்களுக்கு அதிகமான வேலை கிடையாது. பொதுவாக கோழி வளர்ப்பு, நூல் நூற்றல், கைத்தறி ஆடை நெய்தல் போன்ற வேலைகள்தான் தரப்படுகிறது. அவர்கள் பிச்சை எடுத்தே பழகி விட்ட காரணத்தால், அதையே அவர்கள் ஒரு தொழிலாகக் கொண்டு செய்து சுதந்திரமான வாழ்க்கையை அவர்கள் நடத்தி வந்து கொண்டிருந்த காரணத்தால் பல பேர் திரும்பி வந்து விடுகிறார்கள். சிலர் திருவிழாக்காலங்களில் எங்களுக்கு விடுமுறை கொடுத்து வெளியே அனுப்பி விடுங்கள், நாங்கள் பிச்சை எடுத்து விட்டு மறுபடியும் வந்து விடுகிறோம் என்று கூட கேட்கிறார்கள், இது அவர்களின் பிச்சை எடுக்கும் மனப்பான்மையைத்தான் காட்டுகிறது.